# போர்வாள்






| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆடி 30 | வீச்சு |
| --- | --- | --- |
| 1 | 14-8-48 சனிக்கிழமை | 51 |



ஆசிரியர்கள்:
[illegible]
[illegible]


## போலீசாரின் மறியல்!

★

இப்போது நாங்கள் மட்டும்தான் மறியல் செய்கிறோம் என்பதில்லை. சென்னை போலீசாரும் எங்களை விட மிகமிக நன்றாக மறியல் செய்துவருகின்றனர். நாங்களாவது தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளியின் அருகே நின்றுமட்டும் மறியல் செய்துவருகிறோம். ஆனல் நமது மதிப்பிற்குரிய போலீஸ் தோழர்களோ தங்கசாலை வீதியின் இரு முனைகளிலும் நின்றுகொண்டு மறியல் செய்து வருகின்றனர். எங்கள் மறியலால் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களை இந்தி படிக்காதீர்கள் என்று மட்டும்தான் கேட்டுக்கொள்ள முடிகிறது. ஆனல் போலீசாரின் மறியலாலோ மக்கள் தங்கசாலைக்குள்ளேயே புக முடியவில்லை என்பது மட்டுமல்ல, அங்குள்ள பல மார்வாடிக் கடைகளிலும் ஆரிய ஓட்டல்களிலும் மணிக்கணக்காக வியாபாரமே நடைபெறுவதில்லை. நாங்கள் நடத்துவது இந்தி எதிர்ப்பு மறியல் மட்டும்தான். ஆனல் போலீசார் நடத்துவதோ மார்வாடிக்கடை மறியல் கூட! நான் நினைக்கிறேன் ஒரு வேளை பெரியார் இராமசாமியும் ஓமந்தூர் இராமசாமியும் கூவம் மாளிகையில் இந்தக் கூட்டுத் திட்டத்தைத்தான் வகுத்தார்களோ என்று!

—தளபதி அண்ணாதுரை,
11—8—48 சென்னைப் பேச்சு.

தொடர்கதை :

# மனப்புயல்

இராதாமணாளன்

பதினேழாவது பகுதி

## "நான் துரோகியா?"

"குமுதம்...ஒரு....துரோகி! ஆம், உண்மை! உயிருக்குயிராய் நேசித்த என் அத்தானுக்கு மோசம் செய்தேன். நான் ஒரு துரோகிதான்! கண் வீச்சாலும் கற்கண்டு மொழியாலும் கலைஞனின் அமைதியான உள்ளத்தில் காதல் தென்றல் வீசச் செய்து முடிவில் கைவிட்ட காதகி நான்! சொத்து உமதுதான் என்று ஆசை வார்த்தைகளைக் கூறி, மோகனப் புன்னகையில் சொக்கச்செய்து இப்பொழுது அவரைத் தவிக்கவிட்ட நான், மோசக்காரிதான்! ஆனால் உண்மையிலேயே நான் துரோகியா? காதகியா? மோசக்காரியா? ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடுதானா பாசத்தோடு அவரிடம் பேசினேன்! அத்தான் அத்தான் என்று என் இளம்மனது அன்றுபோல் இன்றும் துடிதுடிக்கிறதே! துரோகிக்கு அந்தத் துடிதுடிப்பு இருக்குமா? அல்ல, அல்ல நான் துரோகி அல்ல!....சிவனை மணந்தாயே அது துரோகம் அல்லாமல் வேறென்ன? உன்னையே நம்பி இருக்கும் குமாரைக் கைவிட்டாயே அது துரோகம் அல்லவா?.........மனமே! தந்தையின் பாசத்தையும் அத்தானின் காதலையும் தராசில் எடை பார்த்து, நல்ல முடிவு அன்று கூறத்தவறியது நீதானே? மேலும் என்னை ஏன் வாட்டுகிறாய?............''—அறைக்கு வெளியில் கையில் பால் கோப்பையுடன் நின்றுகொண்டிருந்த குமுதத்தின் மனத்தில் தோன்றிய எண்ணப்புயல் இது.

"ஏனம்மா, உனக்கு யார் வேண்டும்? கொலைகாரன் குமாரா அல்லது கண்ணீர் சிந்தும் உன் தந்தையா? அதனை விரைவாகக் கூறிவிடு! குமுதம், உன் அன்பில் என் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது! சிவன் கட்டும் தாலி உன் கழுத்தில் பிரகாசிக்க வேண்டும் அல்லது கிண்ணத்திலிருக்கும் விஷம் என் தொண்டையை எரித்துக் கொண்டே உள்ளே ஓடவேண்டும்! இது என்னுடைய முடிவு!" என்று அன்றொருநாள் வையாபுரி கையில் விஷக்கிண்ணத்தோடு குமுதத்தைப் பயமுறுத்திக் கேட்டார். கோபத்தால் குழம்பிய மனதோடு பேசும் தந்தையைப் பிறகு தன் விருப்பப்படி மாற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையினால், குமுதம் அன்று அவரது கருத்துப்படியே நடப்பதாக ஒத்துக் கொண்டாள்.

அவள் எண்ணியபடி வையாபுரியின் மனதை அவளால் மாற்ற முடியவில்லை. அவளது நம்பிக்கை தேய்ந்துகொண்டே வந்தது. வைத்தியரின் வற்புறுத்தல் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. காதல் வாழ்வு விரும்பி மகள், தன் தந்தையைக் கொன்றாள் என்ற பழிச்சொல்லுக்குப் பயந்து தன்னைப் பெற்றவரின் கொடூர விருப்பத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டாள், குமுதம்.

குமுதம், சிவனின் மனைவியாக்கப்பட்டாள்! அந்த மணத்தில் இருவருக்கும் பிடித்தமில்லை. இருவரின் உள்ளங்களும் இரு துருவங்களாக இருந்தன. மனோரமாவை எண்ணி எண்ணி சிவனின் உள்ளம் வேதனைப்பட்டது. அத்துடன் காசநோயும் அவன் உடலை வாட்ட ஆரம்பித்தது.

குமாரை நினைந்து நினைந்து குமுதம் கண்ணீர் வடித்தாள். தந்தைக்காக அவள் தன்னைத் தானே தியாகம் செய்துகொண்டாள். ஆனால் தியாகத்தின் பலனை அனுபவிக்குமளவிற்கு அவளிடத்தில் மனதிடமில்லை!

கையில் பால் கோப்பையோடு அறைக்கு வெளியில் நின்றிருந்த

(12-ம் பக்கம் பார்க்க)

★ இந்தியை எதிர்க்க எக்காளம் ஊதிவிட்டோம்!
★ தமிழரின் அறப்போருக்கு முரசறைந்துவிட்டோம்!
இதோ போர்ப்பாட்டு!
இந்தி எதிர்ப்புப் பாட்டு!
கவியரசர் பாரதிதாசன் எழுதியது
தனிப்படி 0 4 0 விற்பனை கழிவு நூற்றுக்கு 20
பாரதிதாசன் பதிப்பகம் :: புதுச்சேரி.




**திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள்,**
**முதலமைச்சர், சென்னை.**

கலியுக ஜனகரே !

வணக்கம். சென்ற திங்கள் அறப்போருக்கு வாருங்கள் என்று தமிழர்களை அறைகூவி அழைத்தார் அன்பர் அவிநாசியார். விபரீதமான விளைவுகளுக்கு அச்சாரம் தந்துவிட்டது அந்த அறைகூவல் என்றாலும் நாங்கள் அவர்பற்றி விபரீதமாக எண்ணவில்லை. ஏனெனில் பின் விளைவு அறியாத முன்கோபக்காரர் அவர்—ஆழந் தெரியாமல் காலை விடுத்து, பின் அவதிப்படுவது அவர் வாடிக்கை—சிடுசிடுப்புக் காட்டுவதும் சீறி விழுவதும் சிறுத்தையெனப் பாய்வதும் செந்தேள் எனக் கொட்டுவதும் அவர் வழக்கம்—அந்த வழக்கத்திற்கு விரோதமில்லாமல் இப்போதும் நடக்கிறார்— அதிலென்ன வியப்பு என்றெண்ணினோம், ஆற்றல் மிக்க தமிழர்களிடம் வீண் சண்டை ஏதுக்கு என்று அவருக்கு நீர் அன்புரை கூறுவீர் என்றும் கருதினோம். "வெடிமருந்துக் கிடங்கில் நின்று கொண்டு வெகு வேகமாகத் தீப்பந்தத்தைச் சுழற்றுகிறீரே— ஆகாதே இந்தப் போக்கு —ஆபத்து நமக்கு மிக வருமே இதனால்" என்று அவசரப்பட்டு மறத் தமிழருடன் மல்லுக்கு நிற்கும் அவினாசியாருக்கு அன்புடன் நன்னெறி காட்டி அவரை நல்லாற்றுப்படுத்துவீர் என்றும் எதிர்பார்த்தோம்! ஆனால், இன்று, நீவிரும், அவர் சென்ற அந்த ஆகாத வழியிலேயே சென்று, அவர் செய்த அடாத செயலையே செய்திடக் கண்டோம், சித்தம் மிகச் சோர்ந்தோம்.

சோர்ந்தோம் எனில், அந்தச் சோர்வு ஏற்பட்டது, நீவிரும் அவிநாசியார் சென்ற வழியே சென்றதால் தமிழன் தொடுத்து நடத்தும் வீரப் போர் தோல்விப் பள்ளத்தைத் தேடுமோ என்ற அச்சத்தால் அல்ல, உண்மையின் உருவமான ஓமாந்தூராரும் நமை எதிர்க்கிறாரே என்றெண்ணி செந்தமிழர் சேனை வெள்ளைக்கொடி காட்டிவிட்டு, மாற்றார் தாளில் வீழ்ந்து வணங்குமோ என்ற சோக நினைப்பால் அல்ல, அடடா நம் முன்னாள் லீடர் இராமசாமி ரெட்டியாரே நமை எதிர்க்க வந்தாரே இனி நாம் போராடி என்ன பலன் என்றெண்ணி தமிழர் தலைவர் பெரியார் இராமசாமி மலைத்து நிற்பாரோ அறப் போர்க்களத்திலே என்ற சபல சித்தத்தாலுமல்ல,—வையமே எதிர்த்து வந்தாலும் விழிகளில் வீரக்கனல் தெறிக்கப்போராடுவரேயன்றி விண்புனல் சிந்தி வெதும்பிடமாட்டார்கள் தமிழர்கள்—எனவே நம் சோர்வுக்குக் காரணம் தமிழகம், இனி, பின் வாங்குமோ என்ற ஏக்கத் துடிப்பல்ல, ஏமாற்று நினைப்புமல்ல, உத்தமர் என்று பெயர் வாங்கிய உயர் தமிழ் அமைச்சர்ஒருவர் பெயருக்கு மாசு வந்ததே, தமிழுக்கு இழுக்குத் தேடினார் அவர் என்ற தீராத பழிச்சொல், பழிச் செயல் புரியாத பசுங்குணச் செம்மல் என எல்லாக் கட்சியினராலும் ஏத்தி ஏத்தித் தொழப்பட்ட ஓமாந்தூராருக்கும் நேர்ந்ததே, "முன்னாளில் நம் தமிழ் நாட்டில் தமிழ்ப் பிரதமர் ஒருவர் இருந்தார், குணத்திலோ அவர் தங்கக்கட்டி, வாழ்விலோ அவர் தூய்மை நடத்தையர், செயலிலோ அப்பழுக்கற்றவர், நெஞ்சுறுதியிலோ வைரமேபோன்றவர், சிறுமை மதியோ அவரை அண்டவும் அஞ்சியது, சிறு நினைப்பாளரோ அவரை நெருங்க நடுங்கினர். ஆனால் இந்த முழு மதியிலும் ஓர் கறை இருந்தது—அழியாத கறை—அழிக்கமுடியாத கறை—காலம் என்னும்கள்ளனாலும் பறித்தெடுக்க முடியாத கறை—என்றென்றும் மறையாத கறை--தன்னைப்பெற்று வளர்த்த தாய் மொழிக்கு, அவர், அந்தோ, கேடுவரத்தக்க கொடுஞ்செயல் ஒன்று தேடினார்" என்று வருங்காலத் தமிழகம் கண்ணீர் சிந்திய வண்ணம் கூறுமே, நம் கண்ணின் மணி என நாம் கருதிப் போற்றிவந்த நம் அருமை ஓமாந்தூராருக்கும் இப்பெயர் வர நேர்ந்ததே, திராவிட இனத்திலே பிறந்தார் ஓர் அமைச்சர், அவர்க்கு எத்தகைய குறையுமில்லை என்றெண்ணிப் பூரித்தோமே, அந்தப் பூரிப்புக்கும் முடிவு வந்ததே, வரை மட்டும் ஓங்கி வளர்ந்த நம் மகிழ்ச்சி வெறும் தரைமட்டம் ஆயினதே, என்றெல்லாம் எம் உள்ளத்தில் மூண்டெழுந்த சிந்தனைச் சிதர்கள் தான் எம் சித்தத்தின் சஞ்சலத்திற்குக் காரணமே தவிர தங்கள் எதிர்ப்பு தமிழர்தம் அறப்போரை அடக்கிடும் ஆற்றல் படைத்தது என்பதல்ல!

உண்மையிலேயே கூறுகிறோம், உள்ளந் திறந்து பேசுகிறோம், தாங்கள் முதலமைச்சுத் தவிசிலே வீற்றிருக்கக் கண்டு பெருமையும் களிப்புங்கொண்டவர்கள், கொண்டது மட்டுமன்றி எங்கள் முதலமைச்சர் என்று இறுமாப்புடன் எடுத்துரைத்து இறும்பூது எய்தியவர்கள் நாங்கள்! ஓமந்தூரார் பிரதமர் ஆனார் என்று கேட்டபோது எங்களைவிட இன்புற்றார் வேறு இருக்க முடியாது. சென்ற ஆண்டு பிரகாசம்—வைத்தியநாதர்—வரதாச்சாரி அச்சு தங்களைக் கவிழ்க்க சதிச்செயல் புரிந்தபோது அந்தச் சதிகாரக் கும்பலைச் சபித்ததிலும் எங்களைவிட முந்திக் கொண்டவர்கள் நிச்சயம் யாருமே இருக்க முடியாது. சதிச்செயல் சாய்ந்தது-சனாதனம் வீழ்ந்தது-நேர்மை நின்றது—நியாயம் வென்றது—ஓமந்தூரார் மீண்டும் பிரதமரானார் என்று கேட்டபோது 'வாழ்க நீ எம்மான்' என்று வாழ்த்துக் கூறியவர்களுள்ளும் எங்களை விட மனமார வாழ்த்திய கூட்டம் வேறொன்று இருக்கும். என்பது நம்பமுடியாத சேதி. தங்களுடைய வெற்றி தோல்விகளை எங்களுடைய வெற்றி தோல்விகளாகவே எண்ணினோம். தாங்கள் வென்றபோது களித்தோம்; தோற்றபோது துடித்தோம், மகிழ்ந்தஞான்று, மகிழ்ந்தோம்; வாட்டமுற்றவேளை வாட்ட

மூற்றேும். தங்கள் சுகத்திலே எங்கள் சுகத்தையும் தங்கள் துக்கத்திலே எங்கள் துக்கத்தையும் நாங்கள் கண்டுவந்தோம். நீங்கள்வேறு நாங்கள் வேறு என்று நாங்கள் ஒருபோதும் எண்ணவில்லை. எப்படி எண்ணமுடியும்? நாங்கள் உங்கள் நண்பர்கள்தானே, உங்கட்கு வேண்டியவர்கள்தானே, உங்களுடன் கூடப் பிறந்தவர்கள்தானே, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்தானே இருவரும், உங்கள் வாழ்க்கையில் மலர்வதுதானே எங்கள் வாழ்க்கை, நீங்கள்தானே நாங்கள், பிறகு, உங்கள் இன்பதுன்பங்களிலே நாங்கள் பங்கு கொண்டதில் வியப்பதற்கென்ன இருக்கிறது?

நீங்கள் திராவிட இனத்திலே தோன்றிய செம்மல். நாங்கள் மட்டும் வேறா? உங்கள் மொழி திராவிடம் எனில் எங்கள் மொழியும் அதுதானே! உங்கள் தாயகம் திராவிடத் திருநாடு! எங்களுடையதும் அதுவேதானே! உங்கள் வாழ்க்கை வழி திராவிட வழி! எங்கள் வழியும் அதுவல்லவா? பிறந்த இனமும், பேசும் மொழியும், பெற்ற நாடும், வாழும் வழியும் ஒன்றெனில் வேறு எதில் நாம் வேறுபட்டவர்கள், உடலிலே அணிந்திருக்கும் சட்டையின் நிறத்திலே தவிர. தங்களுடைய கதர் சட்டை வெள்ளையாய் இருக்கக் கூடும். எங்களுடைய சட்டை கருப்பாய் இருக்கக்கூடும். ஆனால் எங்கள் தளபதி அண்ணா அவர்கள் ஒருமுறை கூறியதுபோல கதரே கூட அழுக்கேறினால் கருப்பாகத்தான் மாறும், ஆகவே அதிலேகூட வேற்றுமை அதிகம் இல்லை, இருப்பதும் நீடித்து நிற்கக்கூடியதல்ல.

எனவேதான் நாங்கள் தங்கள் சர்க்காரோடு போராட வேண்டிய சூழ்நிலை பற்பல முறை ஏற்பட்டதென்றாலும் பொறுத்துக்கொண்டிருந்தோம்; ஆரியம், நம் இருசாரார்க்குமிடையே அகழ் தோண்டிய போதெல்லாம் நாங்கள் அந்த அகழ்மீது அழகிய பாலம் அமைத்துக்கொண்டிருந்தோம், நம் இன ஒற்றுமையில் அவர்கள் 'பிளவு' தேடிய போதெல்லாம் அந்தப் பிளவைத் தீர்க்க நாங்கள் 'சிமெண்ட்' பூசிக்கொண்டிருந்தோம், நம் இருவர்க்குமிடையே "சிண்டு" மூட்டிவிட ஆரியம் சூழ்ச்சி செய்கிறது, அந்த சூழ்ச்சிக்கு நாம் இரையாகக் கூடாது என்றுதான்; திடசித்தத்துடன், "போர் முனைக்கு வருக வருக" எனத் தங்கள் சர்க்காரின் சொல்லும் செயலும் எங்களைப் பலமுறை கூவி அழைத்தபோதுங் கூட, நாங்கள் களத்திலே தங்களைச் சந்திக்க மறுத்தோம், பொறுமை அணிகலன் பூண்டு, புன்முறுவல் பூத்த வண்ணம், அமைதிப் பாசுரம் பாடிக்கொண்டிருந்தோம், ஆனால் இன்றோ நீவிர், அவர்கள்தம் சூழ்ச்சிக்கு இரையாகிவிட்டீர், அவர்கள் தோண்டிய குழியிலே வீழ்ந்துவிட்டீர், நம் இருவரையும் பிணைக்கும் ஒற்றுமைப் பாலத்தின்மீது வெடிகுண்டு வீசிவிட்டீர், ஆரியம் அதைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருந்தது, அதைச் செய்து முடித்துவிட்டீர், அமைச்சரே, எம் அன்புக்குரியவரே, அதோ பாரும், அக்கிரகாரம் ஆநந்தத் தாண்டவமாடுவதை! மீண்டும் பாரும், மார்பிலே தவழும் அந்த முப்புரியை உருவிய வண்ணம் பார்ப்பனீயம் 'பலித்தது நம் சூழ்ச்சி' எனப் பண் பாடும் காட்சியினை! மறுபடியும் பாரும், மைலாப்பூரும் மாம்பலமும் "அகப்பட்டாரா நம் சூழ்ச்சிவலையில் ஆர்ப்பாட்டம் புரிந்துவந்த அந்த ராமசாமி ரெட்டியார்" என ஆநந்த அகவல் வாசிப்பதை! இந்தக் "காட்சி" நேரிடக்கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் இது நாள்வரை போராட்டத்தை ஒத்திப் போட்டுக்கொண்டே வந்தோம். ஆனால் என் செய்வது! இந்நாள், அவினாசியார், இந்தக் "காட்சி"க்குத் திரை தூக்கிவிட்டார், நீங்களும்—ஆம்! இன உணர்ச்சி படைத்தவர் என்று எங்களால் இறுமாப்புடன் கூறப்பட்டுவந்த நீங்களும்தான்!—ஆம், அதுதான் சரி என்று தலை அசைத்துவிட்டீர்கள், கடல் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டது, வீசாத பெரும் புயல் வீச ஆரம்பித்துவிட்டது, இனி என்ன செய்வது, இனி செய்வதற்குத்தான் என்ன இருக்கிறது, புயல் வீசித்தான் தீரும், எமக்கு இணையார் உண்டு என்று இறுமாப்புடன் கூறிவந்த பற்பல மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் இந்தப் புயலிலே சிக்குண்டு சிதையுண்டு போகத்தான் செய்யும்! தங்கள் சர்க்கார் எனும் மாளிகையேகூட இந்தப் புயலிலே சரிந்துபோனாலும் போய்விடக்கூடும். தூங்கும் புலியை "இந்தி"ச் சிறு முள்ளால் குத்தி எழுப்பிவிட்டீர்கள். அகோரப் பசியுடன் அது குகையைவிட்டு வெளிக் கிளம்பிவிட்டது. இனி என்ன நடக்குமோ, யார் அறிவார்?

சென்ற வாரம், எங்கள் மாபெருந்தலைவர்—ஏன், உங்களின் முன்னாள் குரு—பெரியார் இராமசாமியைக் கண்டீர்களாமே, கண்டு, இரண்டுமணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தீர்களாமே, அந்த உரையாடலுக்குப் பிறகுங் கூடவா வடநாடு தென்னாட்டின் மீது பொறிக்கும் அடிமை முத்திரையே ஹிந்தி என்பது தங்கட்குத் தெரியவில்லை? மெய்யாகவா தெரியவில்லை? மெய்யாகவேதானா? வாரத்திற்கு மூன்று முறை மேலிடத்துக் கட்டளையைப் பெறுவதற்காக டில்லிக்குப் போய்த் தீர வேண்டிய கட்டாயத்திலிருக்கும் தங்கட்கு இது தெரியவில்லை என்றால் அதை எங்களால் நம்பமுடியவில்லை என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லையே! அறப்போர்த்தலைவர் பெரியார் தங்களுக்கு அழகுபட விளக்கியிருப்பாரே, இந்தி, தமிழகத்தின் வளர்ச்சிக்குக்கேடு பயக்கும் என்பதனை. அந்த விளக்கத்தைப் பெற்றபிறகும் இந்தி வேண்டும்தான் என்று தாங்கள் பேசுவதானால் அதன் பெயர் வாதமல்ல, பிடிவாதம்! அதன் விளைவாக நேரிடக்கூடியது அமைதி அல்ல, புரட்சி!

இந்தி எதிர்ப்பு இயக்கம் தவறான (!) பாதையில் செல்கிறது என்பதனை விளக்கி அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறீர்களே, அந்த அறிக்கையை எதற்காக விடுத்தீர்கள்? நகைச் சுவைக்கு இலக்கியம் சேர்க்கவா? அல்லது ஆளும் அதிகாரம் கையில் இருந்தால் எந்த அறிக்கையை வேண்டுமானாலும் வெளியிடலாம் என்பதை உலகுக்கு உணர்த்தவா? அல்லது, அதிகார வர்க்கத்திற்கும் உண்மைத் தன்மைக்கும் என்றும் தீராத பகையொன்றுண்டு என்று ஆங்கிலேய அறிஞன் ஒருவன் கூறினானே, அந்தக் கூற்று உண்மைதான் என்பதை எடுத்துக் காட்

டவா? அல்லது மக்கள் உணர்ச்சிக்கு மாறுபட நடப்பதுதான் மக்கள் ஆட்சி என்று புது 'தத்துவ விளக்கம்' வகுக்கவா? இவை அத்தனையும் இல்லை எனில் வேறு எதற்குத்தான் தங்கள் விசித்திர அறிக்கையை வெளியிட்டிருக்கிறீர்கள்?

**"மக்கள் சர்க்கார், மக்கள் நன்மையை முன்னிட்டு ஏதாவதொன்றை கட்டாயமாக்கினாலும் அதை ஆட்சேபிக்கக் கூடாது என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்"** என்று அறிக்கையைத் துவக்குகிறீர்களே. இது நியாயமா? மக்கள் சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு சர்க்கார் (அது உண்மையிலேயே மக்கள் சர்க்காராக இல்லாமல் இருக்கலாம்) எதைக்கட்டாயமாக்கினாலும் (அது மக்கள் நன்மைக்கு எவ்வளவு தீங்கு பயப்பதாயிருந்தாலும்) ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானா? இதுதான் ஜனநாயகமா? மக்கள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதற்கு சர்க்கார் இருக்கிறதா, அல்லது, சர்க்காரின் கட்டாயத்தை ஏற்றுக் கொள்வதற்கு மக்கள் இருக்கிறார்களா? மக்களுக்காக சர்க்காரா? அல்லது சர்க்காருக்காக மக்களா? மக்களுக்காகத்தான் சர்க்கார் என்றால் மக்கள் இந்தியை வெறுக்கும்போது சர்க்கார், அதை ஆதரித்து, அதற்கு அன்புகாட்டி, அதைப் போற்றி வளர்த்து, அதற்கு வெண்பா பாடி, அதனை வாழ்த்துவதும் வணங்குவதும் என்ன நீதி?

**ஹிந்துஸ்தானி இந்திய யூனியனின் பொதுமொழியாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது** என்று சொல்லி இருக்கிறீர்களே அடுத்தபடியாக, யாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது? திராவிடர்களாலா? ஆம் எனில் எப்போது? இல்லை எனில் வேறு யாரால் ஒப்புக் கொள்ளப் பட்டது? வடநாட்டாராலா? அதுபற்றி நமக்கென்ன கவலை? அவர்கள் ஒப்புக்கொள்வதைத் தான் நாமும் ஒப்புக் கொண்டு தீர வேண்டுமா? அப்படியானால் அவர்களின் நிரந்தர அடிமைகளா நாம்?

**தமிழ்நாடு உட்பட தென்னிந்தியாவிலுள்ள மிகப் பெரும்பாலான மக்கள் சர்க்காரின் கொள்கையை ஆதரிக்கின்றனர் என்பது எங்கட்குச் சந்தேகமற தெரியும்.** என்று கூறுகிறீர்களே இந்தக்கூற்று மெய்தானா? தமிழர்கள் கட்டாய இந்தியை ஆதரிக்கிறார்களா? சர்வகட்சித் தமிழர்களும் இந்தியை எதிர்க்கும்போது எந்தத் தமிழர்கள் இந்தியை ஆதரிக்கிறார்கள், உதட்டளவில் தமிழ்ப் பற்றும் உள்ளத்தில் வடமொழிப் பற்றும படைத்த முப்புரித் "தமிழர்கள்" தவிர?

**ஹிந்துஸ்தானி கற்பதால் மாணவர்களின் தாய்மொழி கெடாது:** தங்கள் அறிக்கையில் காணப்படும் மற்றொரு இரத்தினம்! ஹிந்துஸ்தானியால் தமிழ் கெடும் என்று தமிழ்க் கடல் மறைமலையடிகளாரும், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களும், தமிழ்ப் பெரியார் பாரதியாரும் கூறிவிட்ட பிறகு வேறுயார் இருக்கிறார்கள் தமிழகத்தில், கெடாது என்பதற்குச்சான்று கூற? இவர்கள் மூவரையும் விட மேலான தமிழ்ப் புலமை படைத்த தக்கார் எவருளர் தமிழகத்தில்? இவர்கள் மூவரும் இந்தி வந்தால் தமிழ் கெடும் என்று கூறிவிட்ட பிறகு வேறொருவர் கெடாது என்று கூறுவதானால் அவர் இவர்களைவிட தமிழ்ப் புலமை மிக்கவர்களாய் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அவர் கூறுவதற்குப் பொருள் உண்டு. அப்படி யார் இருக்கிறார்கள்?

**"மாணவர்களுக்கு எவ்வித தடை செய்வதையும் அனுமதிக்க முடியாது அத்துமீறி நடப்பவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்."**

—அறிக்கையின் முடிவுரை இது! மிகமிகச் சாதாரணமான வாசகம்! அத்துமீறி நடப்பவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்! எடுக்கப்படட்டுமே! பட்டால் என்ன? தமிழர் உணர்ச்சி குன்றுமோ? தமிழர் வீரம் பறிபோகுமோ? இன்பத் தமிழ் அழியுமோ? செந்தமிழ் நாடு மறையுமோ? என்ன நடந்துவிடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டால்? சிறை செந்தமிழர் சிந்தையைச் சிறை பிடிக்குமோ? தடியடி தமிழர் உணர்ச்சி வெள்ளத்தை வீழ்த்துமோ? துப்பாக்கி வேட்டு தமிழர்தம் உடலிலிருந்து உயிரைப் பிரித்தெடுக்கக் கூடும் ஆனால் இன்பத் தமிழிடமிருந்து தமிழரைப் பிரிக்க முடியுமோ? சிறையும் சிதைவும் உயிர்ப்பலியும் பிறவும் விடுதலைக்குக் கொடுக்கப்படும் விலை! அது தெரியும் தமிழருக்கு நன்றாக! தெரிந்ததால்தான், அடக்கு முறை ஓங்க ஓங்க இன உணர்ச்சி காட்டுத் தீயென எங்கும் பரவிப் பெருகும் என்பதை அறிந்ததால்தான், களத்திலே தமிழர் பிணங்களாகி விழ விழ ஆரிய ஆணவக் காட்டிலே தீ எழும் எழும் என்பதை உணர்ந்ததால்தான், தமிழர் கூட்டம், எத்தகைய தியாகத் தீயிலும் குதித்திட தயார் கூறி விட்டது!

அமைச்சர் அவர்களே, தமிழர், மார்பிலே வீரவடு ஏந்தி களத்திலே சாய்ந்து வீழ்ந்தாலும் வீழ்வரே தவிர புறமுதுகு காட்டாத பரம்பரையிலே வந்தவர்கள் என்பதை தயவுசெய்து நினைப்பூட்டிக் கொள்ளுங்கள் எங்கள்மீது அடக்குமுறையை ஏவு முன்னால்!

எங்களை வீழ்த்திட எண்ணிடும் தங்கள் போன்றோருக்கும் விடுதலை தேடித்தரத்தான் நாங்கள் களம்புகு காதை தொடங்கி இருக்கிறோம், ஆகவே தங்கள்மீது எங்கட்கு விரோதம் இல்லை, வருத்தம் இல்லை, சலிப்புணர்ச்சிகூட இல்லை, தங்களின் இன்றைய அடக்குமுறைக்குக் காரணமே தங்கள் சூழ்நிலையே தவிர தாங்கள் அல்ல என்பது எங்கட்கு நன்றாகத் தெரியும். அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காகத்தான் நாங்கள் போர் தொடுத்திருக்கிறோம்—நாங்கள் என்றால் தீரத் தமிழர்கள்! இந்த கலாசாரப் போராட்டத்திலே நாங்கள் வெல்வது உறுதி, நியாயம் வெல்லும் என்பது உண்மையானால்!

வெற்றி! இல்லையேல் வீர மரணம்! இந்த முடிந்த முடிபோடுதான் நாங்கள் களத்திலே குதித்துவிட்டோம், குதிக்கும்படி செய்யப்பட்டுவிட்டோம்—தங்கள் சர்க்காரால்!

தங்கள் நலம் நாடும்,

அறப் போரில் ஈடுபட்டுள்ள,

**தமிழர்கள்.**

# போர்வாள்

14—8—48 சனிக்கிழமை

## போர் தொடங்கிவிட்டது!

**போர்!** ஆற்றல்மிக்க தமிழர்கள் மிக மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தத் தென்றல் வீசத் தொடங்கிவிட்டது, ஆகஸ்டு 10 முதல்!

அன்று, அறப்போரிலே ஈடுபட்டு விட்டது தமிழகம்! களத்திலே தமிழர்தம் கலாசாரத்தைக் காப்பாற்றுவதற்காகக் குதித்துவிட்டனர் காளைகள்! வெல்க தமிழ் என்று முழங்கியவண்ணம் போராட்டத்தைத் தொடங்கிவிட்டனர் நம் தலைவர்கள்! புறப்படு என்ற பொன்னான உத்தரவை, தமிழருக்கு, தந்துவிட்டனர் நம் தளபதிகள். அறப்போர் மூண்டுவிட்டது! போர் போர் என்று துடித்துக் கொண்டிருந்த காளைகளின் உள்ளத்திலே களிப்புத்தேன் பாயத் தொடங்கிவிட்டது. அஞ்சாத நெஞ்சு படைத்த அடலேறுகளெல்லாம், "ஆம், ஆம், இன்பப் பொன்னாள் வந்துவிட்டது, புகுவோம் போர்க்களம் பெறுவோம் வெற்றி" என்று மகிழ்ச்சியுரை பல வீசத் தொடங்கி விட்டனர். தமிழ் நெஞ்சம் ஒவ்வொன்றும் புதுவிருந்து வந்ததென்று தகதகவென குதித்தாடத் தொடங்கிவிட்டது! போர் அலைகள், தமிழ்க் கடல் உள்ள இடந்தோறும், சுருண்டு சுருண்டு எகிறிக் குதித்து எக்காளம் புரியத் தொடங்கிவிட்டன! போர் தொடங்கிவிட்டது!

கோழைகள் ஒதுங்கி ஓடுகின்றனர். பயந்தாங்கொள்ளிகள் ஒளிந்து மறைகின்றனர். வஞ்ச நெஞ்சங்கள் விசையொடிந்து வீழ்கின்றன. உதவாக்கரை உலுத்தர்கள் "இங்கிருத்தல் ஆகாது" எனப் பதுங்குமிடம் தேடுகின்றனர். ஆனால் வீரர்கள், எதற்கும் ஈடுகொடுத்துப் போராடும் பேராற்றல் படைத்த தீரர்கள், "பைந்தமிழை மாய்ப்பதற்குப் பகை முளைத்ததிங்கே—பாதகரை விட்டுவைத்தால் தமிழர் திறம் எங்கே" என்று பண் பாடிய வண்ணம் பட்டாளம் பட்டாளமாக அணிவகுத்து நிற்கின்றனர் அறப்போரில் ஈடுபட. அந்தப் படைவரிசைகளிலே முதல் வரிசையில் இருந்தாருள் பத்துப் பேர் முதல் நாளிலேயே களம் புகும் பேறு பெற்றுவிட்டனர். வாழ்க அவர் திறம்! வெல்க அவர் முயற்சி!

**தளபதி அண்ணா** அவர்கள் வாருங்கள் தோழர்களே, இதுதான் வழி என்று களம் இருக்கும் திசைதன்னைக் காட்டிய வண்ணம் முன்னே செல்ல, **காப்டன் சி டி. டி. அரசு** சிரித்த முகத்துடனே சிங்க ஏறு போல் அவர் பின்னே நடந்து வர, நண்பர்கள் என். சுப்ரமண்யம், எம். அநந்தப்பன், டி. டி. பாண்டியன், என். கிருஷ்ணன், எஸ். நடராசன், கே. கண்ணப்பன், கலைச் செல்வன், மாரியப்பன் ஆகியோர் தமிழ் வாழ்க, இந்தி ஒழிக, வடநாட்டுச் சுரண்டல் தொலைக என்பன போன்ற இலட்சிய ஒலிகளை முழக்கி வர, "முதல் நாளில் களம் புகும் உரிமை வீரத் தாய்மார்க்கன்றோ உண்டு—நீவிர் ஏன் வந்தீர்" என்று கேட்பது போல **வீராங்கனை தனலட்சுமியார்** தன் ஐந்து வயது சிறுவன் திராவிட மணியை கையோடு அழைத்துக்கொண்டு, வீரர் தம் பக்கத்தே நின்று மறியல் களம் நோக்கிச் செல்ல, ஏழு மாதக் கர்ப்பிணியையும் இவ்வண்ணம் வாட்டி வருத்தும் இந்தப் பொல்லாத ஆட்சி ஒழிக ஒழிக என்று இடிமுழக்கம் புரிந்த வண்ணம் ஐம்பதினாயிரத்திற்குக் குறையாத தமிழர் கூட்டம் இவர்களைத் தொடர்ந்து வர, ஆகஸ்டு 10 செவ்வாய்க் கிழமை காலை மறியல் ஊர்வலம் சென்னை பெத்துநாயக்கன் பேட்டை காசி விசுவநாதர் கோயிலிலிருந்து புறப்பட்டு மெள்ள மெள்ள நகர்ந்து 9½ மணி அளவில் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் பள்ளி

அமைந்துள்ள இடம் வந்து சேர்ந்தது. அங்கே முன்னரே நின்று கொண்டிருந்த வெள்ளம் போன்ற தமிழர் கூட்டத்தோடு, வந்த, கடல் போன்ற கூட்டம் 'சங்கமம்' ஆயிற்று. ஆனதும் 'வாழிய செந்தமிழ்' என்று ஓர் முழக்கம் விண்ணதிர, மார் வாடிக் கடைகள் உடன் அதிர, எழுந்து அமைதியாக, ஒழுங்காக போலீசாரும் கண்டு வியக்கும் முறையில், பள்ளிக்கு வந்த மாணவர்கள், மறியல் தொண்டர் களைக் கண்டு, அவர்கள் 'தம்பீ இந்தி படிக்காதே' என்று கூறிட வேண்டிய நிலையை உண்டு பண்ணிய ஆளவந்தார் களின் போக்கு கண்டு கசிந்து கண்ணீர் மல்கி வருந்திச் செல்லும் நிலையில், $1\frac{1}{2}$ மணி நேரத்திற்குமேல், மறியல் தொடர்ந்து நடந்தது. 11 மணிக்கு மேல், ஊர்வலமாக, மறியல் தொண்டர்கள், பல தெருக்களி லும் தமிழ் முழக்கம் புரிந்தவண்ணம், பூம் பொழில் வரை வந்து, தம் இருப்பிடம் சென்றனர்.

ஆகஸ்டு 10 ல் தொடங்கிய போராட்டம் நாள்தோறும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மறியல் ஒவ்வொரு நாளும் அமைதியான முறையில் மிகவும் சிறப் பாக நடத்தப்பட்டு வருகிறது.

சர்க்கார் இதுவரை யாரையும் சிறை பிடிக்கவில்லை. எவரையும் சிறைபிடிக் காமலே இருந்துவிட்டால், மறியல் தொண் டர்களை, "மறியல் செய்துகொண்டு கிடக் கட்டும், பிறகு தாமே வெளியே செல்லட் டும்" என்று விட்டுவிட்டால், இந்தி எதிர்ப்பு இயக்கம் தானே செத்துவிடும் என்று ஆளவந்தார்கள் எண்ணுகிறார் களாம். பரிதாபம! இந்த ஓர் பள்ளியிலே மறியல் செய்வது ஒன்றுதான் நம்முடைய போர்முறை என்று அவர்கள் எண்ணி விட்டார்கள் போலிருக்கிறது! நமது போர் முறை மறியலிலே தொடங்குகிறதே தவிர மறியலிலே முடியவில்லை. மறியல்! —முதல் கட்டம்! அடுத்த கட்டங்கள் பல உண்டு, சர்க்காரால் புரிந்துகொள்ள முடி யாத கட்டங்கள்! புரிந்தாலும் எப்படி அடக்குவதென்று அறிய முடியாத கட் டங்கள்! மறியல் தொண்டர்களை சர்க்கார் கைது செய்யப் போவதில்லை என்பது திட்ட வட்டமாகத் தெரிந்துவிட்டால் நமது போராட்டத்திற்கு வேறு புது முறைகள் கையாளப்படும், புதிய திட்டங்கள் வகுக் கப்படும், சர்க்கார் திகைக்கும் விதத்தில்! கண்டு அஞ்சும் முறையில்!

மறியல் முறையேகூட இந்தப் பள்ளிக் கூடத்து அளவிலேயே நின்று விடும் என்று சர்க்கார் கனவு காணத் தேவை யில்லை. மறியல், இந்தப் பள்ளியிலே இருந்து வேறு பள்ளிகளுக்குத் தாவும், சென்னை நகரிலே இருந்து வேறு பல நகரங்களுக்குப் பாயும், தமிழகத்தின் பல் வேறு பகுதிகளிலே, சர்க்கார் சிறிதும் எதிர்பாராத விதத்திலே திடீர் திடீர் எனத் தோன்றும். பள்ளிக்கூடங்களில் மட்டும்தான் மறியல் இருக்கும் என்பதும் நிச்சயமில்லை, வேறு 'இடங்களுக்கும்' அது பரவக்கூடும்!

போரிலே, பலமுறைகள் உண்டு! நேர் முகத் தாக்குதல், இடுக்கித் தாக்குதல், பின் வாங்கித் தாக்குதல், திடீர்த் தாக்கு தல், மின்வெட்டுத் தாக்குதல் என்று இவ் விதம் போர் முறையும் வகையும் போர் நிலைக்கேற்ப மாறும். நாம் இப்போது தொடங்கி இருப்பது நேர்முகத் தாக்குதல்! இதனை சர்க்கார் விரும்பவில்லையானல் வேறு முறைகள் கையாளப்படும். முறை களும் வகைகளும் ஏராளம் நம்மிடம். நாம் புதிதாகப் போரிலே ஈடுபடும் கூட்டமு மல்ல, பரம்பரைப் போர் வீரர்கள்! அந்தக் காலத்திலேயே இமயத்தில் புலிக் கொலி நாட்டிய சோழ வேந்தனின் சொந்தக்காரர்கள்! ஆகவே போர் முறை ஒன்றுதான் நம்மிடம் உண்டு என் றெண்ணி ஏமாந்து போகவேண்டாம் ஆளவந்தார்கள் என்று அன்புடன் அவர் கட்கு எடுத்துக்கூற ஆசைப்படுகிறோம்.

தமிழர்களே! போர் தொடங்கி விட்டது! ஆளவந்தார்களின் போக்குக்கு ஏற்ப நம் முடைய போர் முறையும் அவ்வப்போது மாற்றி அமைக்கப்படும். நம் தலைவர் பெரியார் அவர்களும், தளபதி அண்ணு அவர்களும் இப்போது நமக்குத் தருகிற ஒவ்வொரு வார்த்தையும் நமக்கு ஒவ் வொரு கட்டளை. இதை நெஞ்சில் நிறுத் துங்கள், அவர்கள் சொற்படி நடவுங்கள். வெற்றி நமதே!

—

# நமது போர் நோக்கம்!

[பெரியார் ஈ. வே. ரா.]

இந்தி மொழியை கட்டாயமாய் திராவிட மக்கள் கற்றுத் தீரவேண்டுமென்று காங்கிரஸ் (பார்ப்பன ஆதிக்க) சர்க்கார் இன்றைக்கு பத்து ஆண்டுகளுக்கு முன் செய்த ஏற்பாடுகளை திராவிட மக்களாகிய நாம் 10 ஆண்டுகளுக்கு முன்பதாகவே எதிர்த்து தொண்டாற்றி அதனால் சி. ஆர். சர்க்காரின் அடக்கு முறைக்கும், தண்டனை கட்டளைகளுக்கும் ஆளாகி 1000க் கணக்கான நம் மக்கள் சிறை பிடிக்கப்பட்டு சிலர் உயிர்துறக்கப்பட்டு மாபெரும் தொல்லைப்பட நேர்ந்தது யாவரும் அறிந்ததாகும்.

திராவிட மக்களின் எதிர்ப்பானது மேற்கண்டபடியான பல கஷ்ட நஷ்டங்கள் அடைந்த பின் வெற்றி அடைந்தது. அதாவது கட்டாய இந்தி எடுபட்டது.

இன்று 10 ஆண்டுக்குப் பிறகு அதே காங்கிரஸ் சர்க்கார் ஆதிக்கத்திற்கு அதாவது முன்னையைவிட அதிகமான சுதந்திரத்துடனும், அதிகாரத்துடனும், ஆதிக்கத்துக்கு வர நேர்ந்ததும் மறுபடியும் இந்தி முன்னிலும் அதிக மோசமான தன்மையில் குழந்தைப் பருவ முதல் கட்டாயமாக ஆக்கப்பட்டுவிட்டது. அதாவது 10 வயது சிறுவன் கட்டாயமாக 3 மொழி (பாஷை) படித்து பரீக்ஷை தேறித்தான், மேல்வகுப்புக்குப் போக வேண்டும் என்கின்ற நிபந்தனையோடு கட்டாயமாக்கப்பட்டுவிட்டது.

என்ன காரணத்தாலோ கல்வி மந்திரியானவர் "இந்த கட்டாய பாட ஏற்பாடு தமிழ் நாடடு மக்களை கட்டுப் படுத்தாது" என்று ஜூன் மாதத்தில் கட்டளை பிட்டுவிட்டு ஜூலை மாத துவக்கத்தில் தமிழ் நாட்டு மக்களையும் கட்டாயப் படுத்தும்படி உத்தரவிட்டுவிட்டார்.

சென்னை மாகாணத்தில் தெலுங்கு, கன்னடம். மலையாளம் ஆகிய நாடுகளில் அவற்றின் மொழி, எழுத்து (நெடுங்கணக்கு) ஆனது வடமொழி நெடுங்கணக்கு எழுத்து ஓசையை அனுசரித்ததாகும். தமிழ் மொழி எழுத்துக்களானவை வடமொழி, அதாவது ஆரிய மொழி எழுத்து ஓசைக்கு வேறு பட்டவையாகும். தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், தமிழர்களால் சரியானபடி உச்சரிக்க முடியாத, மனதில் பதிய வைக்க முடியாத அவ்வளவு அடிப்படை வேற்றுமை கொண்டதும், எவ்வளவு நாள் படித்து, பேசினாலும் கொச்சையாகக், குற்றமாக, பார்ப்பனர்களால் சற்று தாழ்வாகக் கருதும்படியான மாதிரியில் தான் உச்சரிக்கக் கூடியதாக இருக்கும்.

அன்றியும் இந்தி மொழி, வடமொழி ஆகியவைகள் ஆரிய இன கலாச்சார மொழி. அவை தமிழ் நாட்டில் புகுத்தப்படவேண்டும் என்பதற்குக்காரணமும் குறிப்பாக இதுவரை தெளிவாக எதுவும், சொல்லப்படவில்லை. ஆனால் தமிழ் மக்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பதாகவே இந்தியை எதிர்க்கும் போது தெளிவான, குறிப்பான காரணம் சொல்லி இருக்கிறார்கள். அதாவது இந்தி வட மொழி, வடமொழி மாத்திரமல்லாமல் வடவர், ஆரியர் கலாசாரத்தை அடிப்படையாய்க் கொண்டது, வடவரும் (ஆரியரும்) தென்னவரும் (திராவிடரும்,) அடிப்படையில் எதிர்மாறான கலாசாரத்தையும், பிறவியில் கடுமையான எதிர்த் தன்மையைக் கொண்டவர்களுமாவார்கள். ஆரியக் கலாசாரத்தின்படி "ஆரியர் பிராமணர்கள்; திராவிடர் சூத்திரர், பஞ்சமர்" ஆவார்கள். இந்தத் தத்துவம் (கலை, ஆச்சாரம்) இந்தி அல்லது சமஸ்கிருதம் என்கின்ற வடமொழியில் மாத்திரம்தான் உண்டே ஒழிய, உலகில் வேறு எந்தமொழியிலும், எந்த நாட்டிலும், எந்த மக்கள் பிரிவிலும்கூட இல்லை என்று சொல்லலாம். ஆனால் இந்த "பாரத தேசம்" அல்லது இந்தியா தேசம் என்று இன்று சொல்லப்பட்டு வரும் விசாலமான பரப்புக் கொண்ட இந்தியா என்பதில்தான் இருந்து வருகிறது என்றாலும் இந்த பேதத்தையும் இழிவையும் பற்றி இந்த அதாவது இமயமலையிலிருந்து கன்யாகுமரிவரையுள்ள பிரதேசத்தில், தமிழ் நாட்டில் மாத்திரம்தான் அதிகமாக கண்டித்து எதிர்த்து அப்பிரிவு, பேதம், இழிவு ஆகியவற்றை எந்த உருவத்திலும், கருத்திலும், கலையிலும் ஆட்சியிலும், சமயத்திலும், சட்டத்திலும், சடங்கிலும் கண்டிப்பாக இருக்கக் கூடாது என்று போராடி வருகிறது. இந்தப் போராட்டத்தின் காரணமேதான்; விளைவேதான் இந்த நாட்டை, இந்த நாடல்லாதவன், வேறு எவன் ஆண்டாலும் சரி, வேறு எந்தக்கலை ஆச்சாரம் மொழி ஆண்டாலும் சரி, ஆதிக்கம் செலுத்தினாலும் சரி, ஆனால் ஆரியம், ஆரியன், ஆரிய மொழி, ஆரியக்கலை, ஆரிய சமயம், ஆரிய ஆட்சி சம்பந்தம் ஆகியவை அடியோடு இருக்கக் கூடாது என்று திராவிட நாட்டில், சிறப்பாக தமிழ் மக்கள் மாத்திரம் பெருங் கூப்பாடு போட்டுப்பல தொல்லைகளை அனுபவித்துவருவதாக இருந்துவருகிறது.

உண்மையைத்தெளிவாகசொல்ல வேண்டுமானால் "நான் ஒரு சூத்திரனாகவோ, ஒரு நாலாஞ்சாதி, ஐந்தாம் சாதி இழி மகனாகவோ, இருப்பதைவிடவேறு என்னமாக வேண்டுமானாலும் அதாவது ராஜத்துரோகி, சமயத்துரோகி, சாஸ்திரத்துரோகி காவியத் துரோகி ஆகிய எந்தத் துரோகியாக இருப்பதைப்பற்றியும் நான் சிறிதும் கவலைப்பட மாட்டேன்" என்று பல தடவை சொல்லி வந்திருக்கிறேன். இந்தக் காரியத்தின் முயற்சிக்காகவே எனது வாழ்நாளில் பெரும்பாகத்தைச்செலவழித்து, உடல்பொருள், ஆவியை இந்த முயற்சிக்கு பயன்படுத்தவே வில்லங்க (Encumbrance) சுத்தியாய் ஒதுக்கி வைத்திருக்கிறேன்.

இப்படிப்பட்ட நிலையில் இந்தி கட்டாயம் என்கின்ற திட்டம் தமிழ்

நாட்டிற்கு மாத்திரம் கிடையாது என்று போட்டிருந்த உத்தரவை மாற்றி விட்டதானது எவ்வளவு சகித்தாலும் முடியாத அளவுக்கு நமது வேதனையைக் கிளப்பிவிட்டு விட்டதுடன், அதைப் போராடி ஒழிக்க வேண்டியது தவிர்க்க முடியாத தன்மையாக் ஆக்கிவிட்டது.

ஆனால் சென்னை சர்க்காருக்கு இந்தி கட்டாயம் தேவை என்பதற்குச் சிறிதுகூட ஆதாரம் கிடையாது.

இந்தி தேசீய மொழி என்றோ, அரசியல் மொழி யென்றோ, இந்து கலாசாரமொழியென்றோ, திராவிட மக்களுக்கு பிரதேசமொழி யென்றோ, தாய்மொழி யென்றோ யாரும் சொல்ல முடியாது. அரசியலிலும் இந்தி மேற்கண்ட எவைகளிலும் சேர்க்கப் பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் காங்கிரஸ் பத்திரிகைகளில் இரண்டொன்று ''இந்தி காங்கிரஸ் நிர்மாண திட்டத்தில் சேர்ந்த தல்லவா' என்கின்றன. அது தவறு. காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களில் இந்தி மொழி கட்டாயம் புகுத்துவதென்பது, ஒன்று அல்ல

காங்கிரஸ் நிர்மாணத்திட்டங்கள் நான்கு. அவை ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, மது விலக்கு, கதர் என்பவைகளே யாகும். இவைகளில் எதுவும் இன்று கட்டாயத்தில் இல்லை.

முதலாவது திட்டம் தோல்வி அடைந்து எதிரான பலனைக் கொடுத்து விட்டது. அதாவது எங்கும் இந்து முஸ்லீம் வேற்றுமை. இரண்டாவது திட்டமாகிய தீண்டாமை விலக்கு இதுவரை கட்டாயமாக்கப்படவில்லை. சட்டத்தில் தீண்டாமைஇருக்கிறது. கோவிலில் தீண்டாமை இருக்கிறது. சமயத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது, தீண்டாமை ஒழிப்புக்கு கட்டாயம் ஏற்படுத்தவே இல்லை.

மூன்றாவதுமதுபான ஒழிப்பு. இதுவும் இன்றுவரை கட்டாயமாக்கப்படவில்லை. 2 ஜில்லா, 4 ஜில்லா, 8 ஜில்லா என்றும், எடுத்தஇடத்தில் மறுபடியும் வைக்கலாமாஎன்றும், பெரும் பணம் நட்டமாய் விடுமே என்றும் தடுமாட்டத்தில் இருக்கின்றன.

நான்காவதான கதர் கட்டாயமில்லை. மோசடி புரட்டு பித்தலாட்டங்களுக்கு அயோக்கியத்தனத்துக்குத் தான் பெரிதும் பயன்படுகிறது. பொது மக்களுக்கு நல் வாழ்வுக்கு கதர் கட்டாயமில்லை. சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கூட கதர் கட்டாயமில்லை.

ஏதாவது ஒன்று இவைகளில் கட்டாயமாக இருப்பதாகவைத்துக் கொண்டாலும், இந்தி நிர்மாணத் திட்டமல்ல என்பதோடு, அதை இஷ்டமாக வைப்பதற்குக் கூட இதுவரை சர்க்கார் காரணம் சொல்லவில்லை. "காங்கிரஸ் எதிரிகள் காங்கிரசை எதிர்க்க இதை ஒரு காரணமாய்க் கொள்கிறார்கள்" என்று சொல்வதற்கும் இதில் இடமில்லை. முன்பு 10 வருஷங்களுக்கு முன் எதிர்த்திருப்பதோடு, 1926–ம் ஆண்டிலிருந்து சுயமரியாதைக்காரர்களால் கலாசார தன்மையைக் கொண்டே எதிர்த்து வந்திருப்பதோடு, பார்ப்பனர்களில் காங்கிரஸ் விரோதிகளான பார்ப்பனரும் இந்தியை, வடமொழியை, ஆதரித்து வந்திருப்பதோடு, இந்தியை எதிர்ப்பது காங்கிரஸாருக்கு விரோதம் என்று சொல்வது சிறிதுகூட ஆதார மற்றதாகும். இந்தியை வலியுறுத்த சிறிதும் அவர்களால் காரணம் காட்ட முடியவில்லை என்பதையுமே தூட்டுவதாகும்.

எப்படியோ இந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக நான் இந்தியை எதிர்த்து வந்திருப்பது போலவே இன்றும் இந்தியை எதிர்க்கத் துணிந்துவிட்டேன். தனிப்பட்ட முறையில் மாத்திரமல்ல. திராவிட மக்களின் கழகத் தலைவன் என்கின்ற முறையில் கழகத்தின் மூலமாகவே எதிர்க்கத் துணிந்து விட்டேன்.

இதுவரை திராவிட கழகத்தில் தளபதி என்று சிறப்பு பெயரால் அழைக்கப்பட்டு வந்த தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தளபதி என்பதைக் காரணப் பெயராக ஆக்கிக் கொண்டு தன் படையோடு களத்தில் இறங்க தானாக முன் வந்து பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். களத்தில் அண்ணாதுரை வெற்றி பெற்றால் எவ்வளவு பயன் ஏற்படுமோ, அதைவிட சிறிதும் குறையாத பயன் போரில் மடிந்தாலும், தோல்வி அடைந்து எதிரிகளின் கைதியாக்கப்பட்டாலும் ஏற்படும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. ஏனென்றால் நம் போராட்டம் மந்திரி பதவி, பணக்கொள்ளை போராட்டமல்ல. இனப் போராட்டம். அதிலும் மானப் போராட்டம். இன உணர்ச்சி அற்ற ஜெந்து பிராணி—கூட உலகில் கிடையாது. மனிதன் எப்படியும் இறப்பவனே. இன நலத்துக்கும் மானங்காக்கவும் இறப்பவனே மனிதனாக இருப்பவனாகும்; மற்றவன் மற்ற ஜீவப் பிராணியாக இருப்பவனே யாகும்.

ஆதலால் அண்ணாத்துரையின் வெற்றி, தோல்வி, வாழ்வு, சாவு ஆகியவை தமிழர் இனத்தையும், மானத்தையும் பொறுத்ததானதால் அதன் முடிவு மனிதத் தன்மையையும் விட மேலான தன்மைக்கு மீறி விட்டதாகும். போர் நடந்தேதீரும். வெற்றியோ, தோல்வியோ ஏற்பட்டே தீரும். ஆனால் புறமுதுகு காட்டாத தன்மையில் நேரும் என்பது உறுதி.

போராட்டத்திற்கு, தக்க உதவி இல்லை, ஆதரவு இல்லை என்றாலும், மக்கள் உண்டு, காரணம் உண்டு, அவசியம் உண்டு, கடமை உண்டு என்பதில் சந்தேகமில்லை. இவை இருந்தால் வெற்றி, தோல்வி கருதாமல் இறங்கவேண்டியது வீரன் கடமை. மற்றவர்களுக்கு ஆக வாழ்பவன் கடமை, தன் உயிரை வாழ்வை நல்லதொரு காரியத்திற்காகப் பயன்படுத்தவேண்டும் என்கின்ற மகத்தான கடமையே யாகும். திராவிட சமுதாயம், தமிழர் சமுதாயம் ஒரு அண்ணாத்துரையைத் தானா கொண்டிருக்கிறது? ஈசல் புற்றிலிருந்து புறப்படும் ஈசல் கூட்டங்களைப் போல் எண்ண முடியாத அளவு அண்ணாத்துரைகளைக் கொண்டிருக்கிறது. என்னவோ அவரது நல்ல வாய்ப்பு அவருக்கு முதலில் கிடைத்து விட்டது. அதற்குக் காரணம், எப்படியோ அந்தப் பேர் அவருக்கு இருக்க நேர்ந்த உரிமைதான்.

எனவே ஆள்களுண்டு — பணமும் உண்டு. என் கையில் இல்லையென்றாலும் இன உணர்ச்சியுள்ள, மானமுள்ள திராவிட மக்கள் கையில் இருக்கும் பணத்தை எல்லாம் நான் பாங்கியில் போட்டு வைத்திருக்கிற பணம் என்றும், செக்கு கொடுத்தால் (கேட்டவுடன்) வரும் என்றும் கருதி இருக்கிறேன். எனவே இப்போது

நமக்கு ஆள் இருக்கிறது, பணம் இருக்கிறது. உயிரைப்பற்றி கவலையில்லாத உரம் இருக்கிறது. வேறு என்னவேண்டும்?

துணிந்து இறங்கியும்ஆகிவிட்டது. 6000-க்கு மேற்பட்ட பல கையொப்பங்கள் இரத்த நாற்றத்தோடு நம் காரியாலயத்தில் இறைந்து கிடக்கின்றன. எனவே வேறு என்ன வேண்டும்? திராவிட மக்கள் கண்ணும் காதும் கருத்தும் போராட்டத்தின் பக்கம் துடிதுடிப்போடு, ரத்தக் கொதிப்போடு திரிந்து, இந்தா இந்தா என்று தங்கள் ஆதரவை நீட்டிக்கொண்டு இருக்கிறது. வேறு என்ன வேண்டும்?

"இவ்வளவு இருந்தும் இனி ஒன்றே ஒன்று வேண்டும்" என்று சொல்லுபவர்கள் சிலர். அது என்ன? பத்திரிகைகள் ஆதரவு வேண்டாமா? வேண்டும் தான் ஆனால் கட்டாயமாக வேண்டியதில்லை. இருந்தால் தேவலாம் என்கிற அளவில் நமக்கு அது இல்லை தான்ஏன் இல்லை? இருக்கமுடியாது திராவிட மக்களின் ஈன நிலையைக் காட்ட இது ஒரு எடுத்துக் காட்டு. "இந்த ஈன நிலையைப் போக்கவே பெரிதும் இந்தப் போராட்டம் துவக்க வேண்டி வந்தது" என்றால் பத்திரிகை ஆதரவு எப்படி நமக்கு இருக்கும்? "கண்ணில்லை கண் வைத்தியத்திற்குப் போகிறேனய்யா" என்றால் "போவதற்கு உனக்கு கண்ணு தெரிய வேண்டாமா?" என்பது போல் இருக்கும் நமக்கு பத்திரிகை ஆதரவு வேண்டாமா? என்று குறைபடுவது.

நம் போராட்டத்தைப் பொறுத்தவரை பத்திரிகை வேண்டாம், ஆளும் வேண்டாம், பணமும் வேண்டாம் என்று கூட சொல்லலாம். எப்படி என்றால் 1924-ல் காங்கிரசுடன் பிணங்கி, 1925-ல் பத்திரிகை ஆரம்பித்து, 1926-ல் சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தது, இன்று 1948-ம் ஆண்டு வரை நடத்திய போராட்டத்திற்கு அவற்றைத் துவக்கும் போது நம்மிடம் ஆள் எவ்வளவு? பணம் எவ்வளவு? கூட்டாளிகள் எவ்வளவு? காஞ்சீபுரம் மாநாட்டில் நான் ஒருவனகவே எழுந்து, **ஒரு கை பார்க்கப் போகிறேன். இதில் வாழ்ந்தாலும் சரி, செத்தாலும் சரி?** என்று என்னையே நம்பி அதாவது "**என்னையே என்னி இப்பெரும் பழி ஏற்றேன்**" என்று இராவணன் சொன்னதாக கம்பர் சித்தரித்து இருப்பது போல் இறங்கினேன். இதற்கு பெயர் ஆணவமா? அகம்பாவமா? அல்லவே அல்ல. அல்லது யாருடைய உதவி, காப்பாற்றுதல் தேவையில்லை என்ற எண்ணமா? ஆனால் இவை எதுவும் கிடைக்கவில்லையா? எல்லாம் கிடைத்தது. கிடைத்ததெல்லாம் இந்த நிலையில் எனக்கு ஆக அல்ல. எடுத்துக்கொண்ட காரியத்திற்கு ஆகவே, தான். எனக்கு எதிரிகள் இல்லையா? ஏராளமாகவிருந்தார்கள். இடையூறு செய்ய ஆட்கள் இல்லையா? ஏராளமாகவிருந்தார்கள். அவர்கள் எங்கே? அடுப்பங்கரையில். காரணம் என்ன? என்னைக் கண்டு பயமா? இல்லை, சிறிதும் இல்லை. மற்றென்ன? நம் கொள்கை, நம் காரணம், இவை இன்னய் ஒரு சாதாரண மனிதனிடம் என்னைவிட மோசமானவனிடம் (ஆனால் உண்மையாய் கவலையாய்) இருந்தாலும் கண்டிப்பாய் ஆதரவு—வெற்றி—கிடைத்தே தீரும்.

ஆதலால் பத்திரிகை இல்லையேயென்று யாரும் மனந்தளர வேண்டியதில்லை. பத்திரிகைகள் இருக்கின்றன. இன்று தமிழ் நாட்டில் தமிழ் தினசரித்தாள்கள் மொத்தம் 12 இருக்கின்றன. இவைகளில் திராவிடர்களால் நடத்தப் பெறுபவை 9 இருக்கின்றன. இந்த எண்ணிக்கையை 10 ஆண்டுகளுக்கு முன் யார் நினைத்து இருப்பார்கள்? இன்று பார்ப்பனர் தினசரிப் பத்திரிகைகள் 3. திராவிடர் தினசரிப் பத்திரிகைகள் 9. அதாவது மந்திரிகளைப் போல், மந்திரிகள் 12 பேர்களில் பார்ப்பன மந்திரிகள் 2; திராவிட மந்திரிகள் 10 பேர் என்பது போல் நமக்கு பத்திரிகைகள் இருக்கின்றன. ஆனால் அவை பெரிதும் ஆரியர்களுக்கு அடிமைகளாகவும் ஆரியர்களைக் கண்டு நடுங்கும்படியாகவும் "அவர்களுக்கு அதிருப்தி ஏற்படும்படி நடந்தால் நம் வாழ்வு என்ன ஆகும்" என்று பயந்து தலைமறைவாய் இருக்க வேண்டியவர்களாகவும் இருக்கின்றன. அவைகளின் உதவி கிடைக்கும் அளவு பெற்றுக் கொள்வோம். இல்லாவிட்டாலும் அதனால் நாம் தோல்வி அடைந்துவிட மாட்டோம். ஆனால் எதனால் ஒரு சமயம் நமக்குத் தோல்வி ஏற்படும் என்றால், நம்மில் சூது வாது, நம்மில் பொறாமை, பொச்சரிப்பு, நம்மில் கட்டுப்பாடு அற்ற தன்மை, நம்மில் குழப்பத்தை உண்டாக்குவது, காரியத்தில் கலவரம், காரியத்தில் பலாத்காரம், காரியத்தில் துவேஷம், வெறுப்பு, கோபம், ஆத்திரம் ஏற்படும்படி பேசுவது, தலைவர், நடத்துபவர், தளபதி, முதலானவர்கள் கட்டளைக்கு கட்டுப்படாமல் மாறாக மீறி, அலக்ஷியமாக நடப்பது ஆகியவைகள் தோல்வியைக் கொடுக்கலாம். ஆதலால் இப்போராட்டத்தில் ஈடுபடுபவர்கள், கலப்பவர்கள், கடைசிவரை கட்டுப்பாடும், நாணயமும் யோக்கியமும் உடையவர்களாக இருக்கவேண்டும்.

பலாத்காரம் சிறிதும் தலைகாட்டக்கூடாது. போலீஸார் அல்லது அதிகாரிகள் ஆகியவர்களிடம் அன்பாய் கீழ்ப்படியும் தன்மையாய், நடந்துகொள்ள வேண்டும். தொண்டர்களாய் வருபவர்களுக்கு அவர்கள் பணிகளில் சிறிதும் சுயேச்சை உணர்ச்சி, சொந்த கருத்துப்படி நடக்க வேண்டும் என்ற எண்ணம் என்பவை இருக்கக்கூடாது. உண்மைத் தொண்டன் தன்னுடைய எதையும் ஒப்படைத்தவனாக இருக்கவேண்டும். தன்னை மறக்க வேண்டும். இப்படியாக நடக்க வேண்டியது மிக மிக அவசியம்.

மந்திரிகளிடம் நமக்குப்போராட்டமில்லை, அரசாங்கத்திடம்நமக்குப் போராட்டமில்லை. இந்தியிடம், அடக்குமுறையிடம், போராட்டம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

இதுவே போராட்டத்தின் எனது முகவுரை.

---

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)

## ஆளவந்தார்கள் பேசுகின்றார்கள்!

நமது மக்களே, தமிழர்களே, தனிநாடு தேவை என்று கோஷமிட்டுக்கொண்டு இந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தைத் துவக்கி இருக்கிறார்கள். இந்த தனி நாடு கோரிக்கையைப்பற்றி நினைத்தாலே எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது! **ஓமந்தூரார் 9—8—48**

ஆச்சரியமாகத்தான் இருக்கும், வேறெப்படி இருக்கும்? வாரத்திற்கு நான்கு முறை "பக்த ஹனுமா" னில் ஏறிச் சென்று டில்லி தேவதைகளைப் பேட்டி கண்டுவிட்டு வந்தாலொழிய செங்கோல் ஓச்ச முடியா திருக்கிறாரே அவர்தான், அவரிடம் போய் தமிழ்நாடு தனிநாடாக இருக்க முடியும் என்று சொன்னால் ஆச்சரியமாகத்தான் இருக்கும், வேறெப்படி இருக்கும்? பரம்பரை அடிமைகளிடம் விடுதலை உபதேசம் புரிந்தால், பிறவி முதலாளிகளிடம் பொதுவுடமை தத்துவம் பேசினால், தலைவிதி தத்துவத்தையே நம்பிக் கிடப்பவர்களிடம் ஈரோட்டுப் பாதையைப்பற்றி எடுத்துக் கூறினால் ஆச்சரியமாகத்தான் இருக்கும், வேறெப்படி இருக்கும்?

*　　*　　*

நான் கேட்கிறேன், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் இன்று ஈடுபட்டிருப்பவர்கள் தமிழுக்கு இதுவரை என்ன நன்மை செய்திருக்கிறார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா? **கனம் பக்தவச்சலம் 9—8—48**

எப்படிச் சொல்ல முடியும்? கனம் பக்தவச்சலம் தான் தமிழுக்கு எண்ணற்ற இலக்கியங்களை இயற்றித் தந்திருக்கிறார்! கனம் ஓமந்தூரார் தான் புதிய நூல்கள் பற்பல தீட்டி இருக்கிறார்! கனம் கோபால ரெட்டியும் நண்பர் காமராஜரும்தான் தமிழ்க்கலைப்புலவர்களாயிருந்து தமிழை எத்தனையோ ஆண்டுகளாக வளர்த்து வந்திருக்கிறார்கள்! கேவலம் மறைமலையடிகளாருக்கும் திரு. வி. க. அவர்களுக்கும் நாவலர் பாரதியாருக்கும் தமிழ் தெரியுமா என்ன? அவர்கள் இதுவரை தமிழை வளர்த்ததுண்டா என்ன? செ! செ! தமிழாவது அவர்களால் வளர்க்கப்பட்டிருப்பதாவது! யார் சொல்ல முடியும் அதுபோல? சுத்தப் பொய்! சுத்தப்! பொய்! தமிழ் இன்று உயிரோடிருப்பது பக்தவச்சலம்—ஓமாந்தூரார்—காமராஜ்—கோபால ரெட்டி—அவினாசிலிங்கம் அண்டு கம்பெனியால்தான்! வேறு யாரால்?

*　　*　　*

மற்ற இந்தியர்களை யெல்லாம் விட்டு விட்டு தமிழர்கள் மட்டும் தனித்திருப்பது நியாயமா? அது சரியா? **கனம் ஓமந்தூரார் 9—8—48**

நாமும் கேட்க விரும்புகிறோம் அது நியாயமா? அது சரியா? அடிமை வாழ்வில் இருப்பவன் அடிமையாகவே தானே கிடந்து சாக வேண்டும்! அது தானே ஆண்டவன் விட்ட வழி! அவனுக்கு சுதந்தர நினைவு பிறப்பதும், சுதந்தரக்குடியரசு வேண்டும் என அவன் வீர முழக்கம் புரிவதும் நியாயமா? சரியா?

*　　*　　*

ராஜீயம், கலாசாரம், இராணுவம் ஆகிய எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் இந்தியாவுக்குப்

## ஆரிய ஏடுகள் எழுதுகின்றன!

இந்தியைப்பற்றி கல்வி அமைச்சர் கையாளும் தடுமாற்றக் கொள்கையினால் காங்கிரஸ்காரர்கள் தலை குனியவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது!

**—பாரததேவி 2—8—48**

தமிழுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் கல்வி அமைச்சரே தமிழுக்குக் குழி பறிக்கத்தக்க கட்டாய இந்தித் திட்டத்தைக் கொண்டு வரும்போது, அவரை அமைச்சுப் பீடத்திலேற்றிய காங்கிரஸ்காரர்கள் தலை குனியாமல் வேறென்ன செய்வார்கள்?

*　　*　　*

கட்டாய இந்தித் திட்டத்தில் அவினாசிலிங்கம் செட்டியாருக்குக்கூட அவ்வளவாக நம்பிக்கை இல்லை என்று தெரிகிறது. அப்படியானால் அவர் மந்திரி பதவியை ராஜினாமா செய்து விட்டு இந்தி எதிர்ப்புக் கோஷ்டியோடு சேர்ந்துகொள்ளட்டும்!

**—பாரததேவி 2—8—48**

சேரத்தான் போகிறார், இன்றில்லாவிட்டால் நாளை! நாளை இல்லையேல் மிறிதோர் நாள்! முன்பு, இந்தி வாழ்க என வீர முழக்கமிட்ட நண்பர் ம. பொ. சி. இன்று தனித் திருந்தேனும் மொழிப்போர் நடத்தியே தீருவேன் என்று அறப்போர் முரசு கொட்டவில்லையா, அதுபோல! நாளை வருவதை இன்றே உரைத்த ஆரிய தேவியே, நன்றி உன் அரசியல் ஆரூடத்திற்கு!

*　　*　　*

இந்தியை எதிர்த்து செயற்கைக் கிளர்ச்சி ஒன்று நடத்துவதன் மூலம் அரசியல் லாபம் கிடைக்குமென்று இந்தி எதிர்ப்பாளர்கள் நம்புகிறார்கள்!

**—ஹிந்து 10—8—48**

ஹிந்துவே! எவ்வளவோ கஷ்டப்பட்டு இந்த மகத்தான உண்மையைக் கண்டு பிடித்திருக்கிறாயே! அடுத்த ஆண்டு, நோபல் பரிசு நிச்சயம் உனக்குத்தான்! உன்னைத் தவிர வேறு யாரால் முடியும் இவ்வளவு பெரிய "உண்மை" களைக் கண்டு பிடிக்க!!

*　　*　　*

இப்போது வகுக்கப்பட்டுள்ள ஹிந்தித் திட்டத்தில் கட்டாயம் என்று இருப்பது கொஞ்சம்தான். இந்தியாவுக்குப் பொதுமொழி வேண்டும் என்பதில் அக்கறை உடையவர்கள் அந்தக் கொஞ்சம் கட்டாயத்தைக் கூடவா சகித்துக் கொள்ளக் கூடாது?

**—இந்தியன் எக்ஸ்பிரஸ் 9—8—48**

கட்டாயம் என்பதே கிடையாது என்று 'ஒரேயடியாகச்' சாதிக்கும் ஓமாந்தூராரும் அவினாசியாரும் கவனிக்க! கொஞ்சம் **கட்டாயம்** இருக்கிறது என்று எக்ஸ்பிரஸ் கூறுகிறது. இருக்கும் கட்டாயத்தின் அளவு எவ்வளவு என்பதை பிறகு அளந்து தெரிந்து கொள்ளலாம். முதலில், "கட்டாயம்" இருக்கிறது என்று எக்ஸ்பிரஸ் கூறுவதை அமைச்சர்கள் குறித்து வைத்துக் கொள்ளட்டும்! நினைப்பூட்டுகிறோம், எக்ஸ்பிரஸ் சூனா மானா ஏடல்ல!

*　　*　　*

இந்தியை எதிர்த்து நேரடி நடவடிக்கை எடுப்பதென்பது சர்க்காரை சவாலுக்கழைப்பது போன்றது ஆகும்! அதை சவால் என்றே கொண்டு சவால் என்ற முறையிலேயே அதை ஒழித்துக்கட்ட வேண்டும் சர்க்கார்!

**—அதே ஏடு 9—8—48**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குமுதம் கதவைத் திறந்து கொண்டு, சோக நடை நடந்து உள்ளே சென்றாள்.

அறையினுள் கட்டிலின் மேல் சிவன் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

இரவு நேரத்தில், புது மனைவி கட்டிலறையில் நுழையும் போது, காளையின் உணர்ச்சி மிக்க உள்ளம் களிப்பினால் எவ்வண்ணம் கூத்தாடும்? வாரி அணைத்து, வஞ்சியும் தானும் வானமண்டலத்தில் பறக்க வலிமைமிக்க அவனது தோள்கள் எவ்வளவு துடிதுடிக்கும்?

உடன் பிறந்தாள் அறையினுள் வரும்போது ஏற்படும் உள்ள உணர்ச்சிதான், சிவனுக்கு இருந்தது. அழகி ஒருவளின் வாழ்வைப் பாழாக்குகிறோமே என்ற நினைப்பு அவனை வேதனைக்குள்ளாக்கியது. தன்னைப் பிடித்துள்ள நோய், தளிர் மேனியாளுக்கும் தொத்திக் கொள்ளப் போகிறதென்றெண்ணி, அவளிடம் அதிகமாக நெருங்கிப் பேசவும் அவன் அஞ்சினான்.

"வா, குமுதம்" என்று அன்பாக அழைத்தான். குமுதம் அருகில் வந்து பால் கோப்பையை அவனிடம் கொடுத்து விட்டு நின்றாள்.

சிவன் இளம் பெண்ணின் முகத்தை உற்றுப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கின.

"ஏன் அழுகிறீர்?" என்று பரிவாக குமுதம் வினவினாள்.

"உன் வாழ்வைப் பாழாக்கப் பிறந்தேனே, என்றெண்ணி...."

"வேண்டாம்! நோயால் வாடியுள்ள உடல், கவலையால் மேலும் பாதிக்கப்படும்!"

"குமுதம், உன்முகம் எப்பொழுதும் கவலையில் மூழ்கி இருக்கிறதே, அது ஏன்?........ நோயாளியைக் கணவனாகப் பெற்றோமே என்ற கவலையினாலா?......குமுதம்! என்னை மன்னித்துவிடு! இது நான் செய்த தவறல்ல! என் தாயின் பலவந்தத்தால் ஏற்பட்ட விபரீத மணம் இது!........"

"சென்றதை எல்லாம் நினைத்து வருத்தப்படுவது பயனுள்ளதா? உண்மையிலேயே எனக்கு என் வாழ்வைப் பற்றிய கவலையே இல்லை! தங்கள் உடல் நாளுக்குநாள் இளைக்கிறதே என்ற வருத்தம்தான் எனக்கு."

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, சிவன் கட்டிலில் சாய்ந்து பெருமூச்சு விட்டான். அறையின் மற்றொரு பக்கத்திலிருந்த வேறொரு கட்டிலில் குமுதம் படுத்தாள், வேதனை அலைமோதும் உள்ளத்தோடு.

மகனுக்கு மறுமணம் செய்து பார்த்துவிட்டுதான் கண் மூடுவேன் என்ற பிடிவாதத்தோடு இருந்த தாயாரம்மாள், சிவனுக்கு மணமான சில மாதங்களில் உயிர் நீத்தாள்! அமைதியாக அவள் இறந்தாள். ஆனால் இரு இளம் உள்ளங்களின் அமைதி அவளால் பாழ்படுத்தப் பட்டது.

காதலி மனோரமாவின் மறைவு, அன்பு அன்னையின் பிரிவு இவைகளால் ஏற்பட்ட கவலை அவனை மிகமிகப் பாதித்தது. சுற்றிச்சுற்றி புயல் வீசும் கடலில் சிக்கிய படகானான் அவன்.

வைத்தியர் வையாபுரி சிவனையும், குமுதத்தையும் சோலையூரிலிருந்து மலர்புரிக்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

மருமகனின் உடலைச் சீர்குலைக்கும் நோயைப் போக்க வையாபுரி எவ்வளவோ பாடுபட்டார்.

நோயாளியின் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்த சிவன், புரட்சிக் கவிஞரின் கவிதைத் திரட்டை கையில் வைத்துக் கொண்டு, அதிலுள்ள ஒருபாட்டின் சில வரிகளைமட்டும் அடிக்கடி மனதிற்குள்ளாகவே படித்துக்கொண்டிருந்தான். அந்த வரிகளை, தான், வாய்விட்டு வெளி சொல்ல, நாள் நெருங்கி விட்டதே என்றெண்ணி வருத்தமும் மகிழ்ச்சியும் அடைந்தான்.

(தொடரும்)

---

**ஆளவந்தார்கள் பேசுகின்றார்கள்** (தொடர்ச்சி)

பொது மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்பதை எவரும் மறுக்க முடியாது!

**—கனம் கோபால ரெட்டி 9—8—48**

நிச்சயம் மறுக்க முடியாது! தென்னாடு என்றென்றைக்கும் வடநாட்டிற்குக் குனிந்து கொடுத்தே வாழ வேண்டுமானால் அதற்கு இந்தி தேவைதான்! நிச்சயம் தேவைதான்! அதை எவரும் மறுக்க முடியாது! மறுக்கவே முடியாது! சிலர் **மறைக்கலாம்** வேண்டுமென்றே! சிலர் **மறக்கலாம்**, முடியுமானால்! ஆனால் மறுக்க முடியாது, யாராலும்!

* * • *

**ஆரிய ஏடுகள் எழுதுகின்றன!** (தொடர்ச்சி)

ஆரியரின் பரம்பரைக் குணமே மித்திரபேதம் தானே! அந்தப் பழைய பரம்பரை உரிமையாகிய பிரித்தாளும் தந்திரத்தைத்தான் இப்போதும் கையாள்கிறது எக்ஸ்பிரஸ். திராவிட அமைச்சர்களை, திராவிட கழகத்தின்மீது மோதவிடுகிறது! இரண்டு ஆடுகளை சண்டையிட விட்டு விட்டு, சிந்தும் இரத்தத்தைக்குடிக்கிறது ஓநாய்! நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அது வாலைக் குழைத்துக் கொண்டு குப்பைமேட்டுக்குத்தானே போகும்! அதுபோலமாடமாளிகையிலே குடி இருந்தாலும் எக்ஸ்பிரஸ் தன் பிறவிக்குணத்தை மறந்து விடவில்லை! எப்படி முடியும் மறக்க?